முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.24.03.2025

O.S.No.172/2021

வா.சா.1 அருண் குமார்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

1) என் காலகட்டத்தில் இரண்டு வேலைகள் நடந்ததாக சொல்வது நீச்சல் குளம் மற்றும் ஆடிட்டோரியம் என்றால் சரியல்ல. நீச்சல் குளம் மற்றும் சூட்டிங் ரேஞ்ச் வேலைகள் நடைபெற்றது. அந்த இரண்டு வேலைகளும் பூபதி என்ற ஒப்பந்தத்தாரர் மூலமாக நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கும் ஒப்பந்தத்தாரர் பூபதிக்கும் எவ்விதமான விரோதமும் கிடையாது என்றால் சரிதான். நான் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்உரையை படித்து பார்த்தேன். எதிர்உரை பக்கம் 2 கடையில் இருந்து 3ம் பக்கம் முழுவதும் ஒப்பந்தாரர் பூபதி எழுதிய கடிதம் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி பதில்உரையில் அவர்களிடம் காசோலை மற்றும் புத்தகம் இருக்கவில்லை என்றும் நானும் நிர்வாக குழு உறுப்பினர் என்.டி.பெருமாளும் வந்து கையெழுத்து மட்டும் வாங்கி செல்வோம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு பதிலுரையில் உள்ளது அது தவறானது.

2) அந்த பதிலுரை சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவித்து நாங்கள் மறுப்பு தாக்கல் செய்யவில்லை என்றால் ரிப்லிகேசன் தாக்கல் செய்யவில்லை நிர்வாகத்திற்கு பதில் கொடுத்துள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் பூபதி சொல்லியுள்ள தகவல்கள் தவறு என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பூபதி ஸ்டேட்மெண்ட் தவறு என சொல்லியுள்ளேன். எனக்கு நிர்வாகத்தினர் 10.03.2018 கடிதத்தில் பூபதியின் 30.05.2017 கடிதம் குறித்து விளக்கம் கேட்டார்கள் என்றால் சரிதான். நான் அந்த கடிதத்திற்கு எழுத்து பூர்வமாக கடிதம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல பதில் கொடுத்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு 10.03.2018 தேதியிட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.5 ஆகும்.** நான் பதில் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

3) எனக்கு நிர்வாகத்தினர் 03.04.2018 எழுதியிருந்தார்கள் என்றாலும் என்னிடம் காட்டப்படும் கடிதம் அந்த கடிதம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.6 ஆகும்.** அந்த

கடிதத்தில் இணைப்பு கடிதமாக 11.04.2018 மாலை 3.00 மணிக்கு விசாரணைக்கு ஆஜராக சொல்லியிருந்தார்கள் என்றால் சரிதான். **அந்த கடிதம் பி.வா.சா.ஆ.7 ஆகும்.** நான் பி.வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல பதில் அனுப்பியிருந்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு 11.04.2018 விசாரணைக்கு ஆஜராகவில்லை என 11.04.2018 தேதியிட்ட கடிதம் ஒன்று அனுப்பினார்கள் என்றால் என்னிடம் காட்டப்படுவது அந்த கடிதம். **அது பி.வா.சா.ஆ.8 ஆகும்.** எனக்கு 18.04.2018 தேதியிட்ட கடிதம் என்னை 25.04.2018 அன்று விசாரணைக்கு வர தெரிவித்து நிர்வாகத்தினர் அனுப்பினார்கள் என்றால் ஆம். **அந்த கடிதம் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.வா.சா.ஆ.9 ஆகும்.** நான் 11.04.2018 விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆஜராகதது குறித்து காரணம் கூறி பதில் கொடுத்தேனா என்றால் நினைவில் இல்லை.

4) என்னிடம் காட்டப்படும் 25.04.2018 கடிதம் எனக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2.5.2018 கடிதம் என்னை 9.5.2018 அன்று விசாரணைக்கு ஆஜராக கேட்டு வழங்கப்பட்ட கடிதம் என்றால் சரிதான். **அந்த கடிதம் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.10 ஆகும்.** நான் 9.5.2018 அன்றும் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 14.05.2018 கடிதம் எனக்கு வழங்கப்பட்டது என்றால் எனக்கு அவ்வாறு வழங்கப்பட்டதா என சந்தேகமாக உள்ளது. விசாரணை அதிகாரிகள் 30.01.2021 அன்று விசாரணை அறிக்கை எனக்கு அனுப்பினார்கள் என்றால் எனக்கு அனுப்பவில்லை. விசாரணை அதிகாரிகளால் எனக்கு 30.01.2021 அன்று 17 தரப்பின் கீழ் நான் மொத்தம் நான்கு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து எட்னூத்து எட்டு ரூபாய் நிதி மோசடி செய்துள்ளதாக குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

5) என்னிடம் காட்டப்படும் 16.04.2021 கடிதம் நிர்வாகத்தால் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.11 ஆகும்.** 25.11.2024 அன்று என்னிடம் காட்டப்படும் கடிதம் என்னை பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்குவதாக தெரிவித்து அனுப்பபட்டது என்றால் சரிதான். **அந்த கடிதம் மற்றும்**

**அஞ்சலக ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.12 ஆகும்.** 2018 முதல் இன்றைய தேதி வரை என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தவறு என மறுத்து நான் யாருக்கேனும் கடிதம் எழுதினேனா என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கடிதம் எழுதினேன் செயலாளருக்கு கடிதம் எழுதினேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். சில கடிதங்களை பதிவு தபாலிலும் சில தபால்களை நேரடியாகவும் கொடுத்திருந்தேன். நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த கடிதமும் யாருக்கும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 17 தலைப்புகளில் என் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாகவும் அதனால் ஏற்பட்ட இழப்பீட குறித்து விவரம் தெரிவித்து எனக்கு அறிக்கை வழங்கப்பட்டது என்றாலும் அதற்கு நான் எந்த பதிலும் வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு நிர்வாக குழு ஒப்புதலின் பெயரில் அறிவிப்புகள் வழங்கப்பட்டது என்றாலும் ஒவ்வொரு நடவடிக்கையும் நிர்வாகக்குழு ஒப்புதலுடன் எடுக்கப்பட்டது என்றாலும் எனக்கு நிர்வாக குழு நடவடிக்கைகளில் நகல்கள் தரவில்லை. நான் 1ம் பிரதிவாதி சங்கத்தின் விதிகளை பார்த்துள்ளேன்.

6) விதிப்படி நிர்வாக குழு தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் கடிதம் எழுதி பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரிதான். நான் அவ்வாறு நிர்வாக குழு தீர்மானம் குறித்து என்றாவது நகல் கேட்டு கடிதம் எழுதினேனா என்றால் எழுதியுள்ளேன். எனக்கு நிர்வாக குழு தீர்மானங்கள் குறித்து தெரியும் என்பதால் நான் அவ்வாறு எந்த கடிதமும் எழுதி நிர்வாக குழு தீர்மானம் நகல் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் மீது இயற்கை நியதி அடிப்படையிலும் விதிப்படியும் விசாரணை நடைபெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றாலும் அதில் எந்த விதி மீறலும் இல்லை என்றாலும் சரியல்ல. என்னை பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கியதால் தற்போது இந்த வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கட்டுமான பணிகளில் ஏற்பட்ட குழறுபடிகளால் நிர்வாகத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய கடமைப்பட்டவன் என்றாலும் அதனை தவிர்க்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் மோசடி செய்ததாக அறிக்கை வழங்கப்பட்ட பின்பும் நான் அவர்களுக்கு எதிராக இழப்பீடு கேட்டு அறிவிப்பு வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்தான்

தாக்கல் செய்ய வேண்டும். வழக்கறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். என் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.